FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319454

1. District : திருப்பூர் PS: வீரபாண்டி Year: 2026 FIR No.: 10/2026/AC/TPR Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள் 20.8.2026

2. (i) Act சட்டம்: The Prevention Of Corruption Sections பிரிவுகள்: 7 (b)
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 2026ம் வருடம் மே மாதம் 30ஆம் நாள் Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை முந்தைய தேதி வரை.

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 20.8.2026 Time : 18.45 மணி.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 20.8.2026 Time : 18.45 மணி.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL.I. நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினி தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: அண்ணா கூட்டுறவு வீட்டு கடன்மானை சங்கம், திருப்பூர், சுமார் 2 கி.மீ தெற்கு திசை.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. இளங்கோவன். (b) Father's/ Husband's Name : சுப்பிரமணியம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : — (d) Nationality : இந்தியன் (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் பனியன் கம்பெனி தொழிலாளர் (g) Address : 1ஏ1, நாகாத்தாள் கோவில் வீதி, முகவரி சாமுண்டிபுரம், காந்தி நகர், திருப்பூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திருமதி. இளங்கோவன், பெருமாளாளர், அண்ணா கூட்டுறவு வீட்டு கடன்மானை சங்கம், திருப்பூர்.
2). திரு. திருநாவுக்கரசு 3) திரு. தங்கசன்.
பணிக்கர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்


தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)



13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/02/2026 20/2/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்
பி.எ.க.க. பிரிவு, திருப்பூர்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 10/2026/ AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி'..

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் B.கீதாலட்சுமி ஆகிய நான் 20.08.2026-ம் தேதி மாலை 18.45 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு. S.லோகநாதன், த/பெ.சுப்பிரமணியம், 1/A/1, நாகாத்தாள் கோவில் வீதி, சாமுண்டிபுரம், திருப்பூர் மாவட்டம் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு நாள்:20.08.2026 அனுப்புநர், S.லோகநாதன், த/பெ.சுப்பிரமணியம், 1/A/1, நாகாத்தாள் கோவில் வீதி, சாமுண்டிபுரம், திருப்பூர் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ஐயா, நான் திருப்பூர் மாவட்டம், சாமுண்டிபுரத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூரில் உள்ள Vee Kay Garments என்ற கம்பெனியில் productionல் வேலை செய்து வருகிறேன். நான் திருப்பூர் மாவட்டம், அவிநாசி ரோடு, கங்கா நகர் 2வது வீதியில் உள்ள அண்ணா கூட்டுறவு வீட்டு கட்டுமான சங்கத்தில் சுமார் 4 வருடங்களாக உறுப்பினராக இருக்கிறேன். எனது உறுப்பினர் எண் 13965 ஆகும். நான் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு இந்த கூட்டுறவு வீட்டு கட்டுமான சங்கத்தில் ரூ.10 லட்சம் வீட்டு அடமான கடன் பெற்றிருந்தேன். மீண்டும் நான் வீட்டு அடமான கடன் பெற வேண்டி கடந்த 9 மாதங்களுக்கு முன்பாக அண்ணா கூட்டுறவு வீட்டு கட்டுமான சங்கத்தில் பணிபுரியும் திரு.தாமரைசெல்வன் என்பவரை அணுகினேன். அவர் கேட்ட எனது வீட்டு பத்திர நகலை அவரிடம் கொடுத்திருந்தேன். அதன்பின்பு லோன் சம்மந்தமாக ஒவ்வொரு முறை அவரை சந்திக்கும் போதும் வீட்டு வரி ரசீது நகல், தண்ணீர் வரி ரசீது நகல், எனது வீட்டில் குடியிருக்கும் வாடகைதாரர் உடன் போடப்பட்ட ஒப்பந்த நகல் ஆகியவற்றை கேட்டு வாங்கி வைத்து கொள்வார். லோன் பற்றி நேரிலும் செல்போனிலும் கேட்கும் போதெல்லாம் மேடம் எனது விண்ணப்பத்தை பார்க்கவில்லை என்று கூறுவார். நான் விண்ணப்பம் கொடுத்து ஆறு

மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் கடந்த ஜூன் முதல் வாரத்தில் அண்ணா கூட்டுறவு வீட்டு கட்டுமான சங்கத்திற்கு சென்று செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடத்தை பார்த்த போது அவர் எனது ஆவணங்கள் பற்றி கேட்டார். பின்பு அவர் அவரது அலுவலக ஆவணங்களை பார்த்துவிட்டு என்னிடம் ஏற்கனவே நான் வாங்கியிருந்த வீட்டு அடமான கடன் நிலுவைத் தொகையை கட்டி முடித்தால் தான் புதிய கடன் கேட்க முடியும் என்று கூறினார். அதனால் நான் கடந்த 10.06.2026ம் தேதி வாங்கியிருந்த பழைய வீட்டு அடமான கடனை கட்டி முடித்துவிட்டேன். மீண்டும் கடந்த ஜூன் மாதம் 3வது வாரத்தில் அண்ணா கூட்டுறவு வீட்டு கட்டுமான சங்கத்திற்கு சென்று செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடத்தை பார்த்து ஏற்கனவே திரு.தாமரைசெல்வனிடம் ஆவணங்களை கொடுத்துள்ள விபரத்தை அவரிடம் தெரிவித்தேன். தாமரைசெல்வனிடம் கேட்ட போது நான் கொடுத்த ஆவணங்கள் தொலைந்து விட்டதாக கூறினார். அதனால் செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடம் என்னிடம் மீண்டும் புதிதாக ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கூறினார். பின்னர் தானே என்னிடம் அந்த சங்கத்தில் இருந்த புரோக்கர் திரு.திருநாவுகரசு என்பவரை அழைத்து எனது லோன் சம்மந்தமான ஆவணங்களை தயார் செய்து கொடுக்குமாறு சொன்னார். நான் மீண்டும் திரு.திருநாவுகரசுவிடம் எனது வீடு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கொடுத்திருந்தேன். அவர் எனது ஆவணங்களை பெற்றுக் கொண்டு தான் கடந்த 20 வருடங்களாக சங்க உறுப்பினர்களுக்கு இந்த சங்கத்தின் மூலம் பலதரப்பட்ட லோன்களை பெற்றுத் தருவதாகவும், ஒவ்வொரு லோனிற்கும் செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடத்திற்கு 5% என கமிசன் பணம் கொடுத்தால்தான் லோனுக்கு அனுமதி அளிப்பார் என்று கூறினார். நான் கமிசன் பணம் கொடுப்பதற்கு சிரமமாக உள்ளது என்றும் இப்பொழுதுதான் வீடு கட்டி முடித்துள்ளதால் பணம் ஏற்பாடு செய்ய முடியாது என்று கூறினேன். பின்னர் திரு.திருநாவுகரசு எனது விண்ணப்பத்தை செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடமிடம் கொடுத்துவிட்டு வந்து என்னிடம் நான் கூறியதை செயலாளரிடம் தெரிவித்ததாகவும் அதற்கு செயலாளர் 5% லிருந்து 3% ஆக குறைத்து கமிசன் பணம் கேட்டதாக கூறினார். நான் வீட்டு அடமான கடனாக ரூ.22,00,000/- கேட்டிருந்தேன். அதற்கு 3% வீதம் கமிசன் பணமாக ரூ.66,000/-யை செயலாளரிடம் கொடுத்தால்தான் லோனை அனுமதிப்பார் என்றும், மேலும்

ரூ.66,000/-யை பணமாக கொடுக்க வேண்டாம், தனது பெயரில் செக்காக கொடுங்கள் என்றும் அவ்வாறு செக் கொடுத்தால் உடனடியாக லோனிற்கு செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடம் அனுமதி கொடுப்பார் என்று கூறினார். நானும் அதற்கு பின்னர் செக் கொடுக்காமல் திரு.திருநாவுகரசை பலமுறை போனில் தொடர்பு கொண்டு லோன் சம்மந்தமாக கேட்டேன். ஆனால் கடந்த 2 மாத காலமாக எனக்கு வீட்டு அடமான கடன் கொடுக்கவில்லை. கடந்த சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு நான் திரு.திருநாவுகரசிடம் போனில் எனது லோன் பற்றி பேசிய போது அவர் செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடம் கேட்ட பணம் ரூ.66,000/-யை செக்காக கொடுத்தால்தான் லோன் கிடைக்கும் என்று முடிவாக சொன்னார். நான் வேறு வழியில்லாமல் கடந்த 08.07.2026ம் தேதி அண்ணா கூட்டுறவு வீட்டு கட்டுமான சங்கத்திற்கு அருகில் திரு.திருநாவுகரசை சந்தித்து ரூ.66,000/-க்கு திருநாவுகரசு என்ற பெயருக்கு எனது SBI வங்கி கணக்கு எண் 39564815505க்கு உண்டான செக் எண். 261251யை தேதி குறிப்பிடாமல் கையொப்பமிட்டு வழங்கியிருந்தேன். அப்போது திரு.திருநாவுகரசு என்னிடம் அவர் தயார் செய்து கொடுத்த விண்ணப்ப செலவிற்காகத்தான் நான் செக் கொடுத்துள்ளேன் என்று எழுத்து மூலமான கடிதம் பெற்றுக் கொண்டார். அதை திரு.திருநாவுகரசு பெற்றுக் கொண்டு செயலாளர் திருமதி.ஜோதிமணி அவர்களிடம் கொடுத்துவிடுவதாகவும், உடனடியாக செயலாளர் அவர்கள் லோனுக்கு அனுமதி வழங்கிவிடுவார் என்று கூறினார். எனக்கு வீட்டு அடமான கடன் பெறுவதற்கு 3% லஞ்சமாக ரூ.66,000/- கொடுக்க விருப்பம் இல்லாததால் எனது SBI வங்கிக்கு எழுத்து மூலம் Stop payment கடிதம் கொடுத்திருந்தேன். பின்னர் கடந்த 11.08.2026ம் தேதி செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடம் IDBI வங்கி செக் எண். 307953 நாள் 11.08.2026 மூலம் எனக்கு Share Capital ரூ.66,000/-, Administration Fees ரூ.5,000/-,Member Insurance ரூ.6,936/- என மொத்தம் ரூ.77,936/- பிடித்தம் போக ரூ.21,22,064/-யை வீட்டு அடமான கடனாக அனுமதித்திருந்தார். அந்த செக்கை செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடம் என்னிடம் கொடுக்காமல் திரு.திருநாவுகரசிடம் எனது வங்கி கணக்கில் வரவு வைக்க கொடுத்துள்ளார். திரு.திருநாவுகரசும் அந்த செக்கை எனது வங்கி கணக்கில் வரவு வைக்க கொடுத்த பின்பு, நான் கொடுத்த எனது SBI செக்கை வரவுக்கு வங்கியில் கொடுத்துள்ளார். ஆனால் நான் ஏற்கனவே வங்கியில் Stop

payment கடிதம் கொடுத்திருந்ததால் அவரால் செக் மூலம் பணம் எடுக்க முடியவில்லை. உடனே திரு.திருநாவுகரசு என்னை போனில் அழைத்து செக் Dishonour ஆகிவிட்டதாகவும் உடனடியாக வந்து பார்க்குமாறு சொன்னார். அதன் பிறகு நான் கடந்த 19.08.2026ம் தேதி திரு.திருநாவுகரசுவை சந்தித்தேன். அவர் நீங்கள் பணம் ரூ.66,000/- கொடுப்பதாக உறுதி கூறியதன் பேரில்தான் செயலாளர் திருமதி.ஜோதிமணி லோனை அனுமதித்தார் என்றும் தற்போது செக் Dishonour ஆகிவிட்டது என்றும் செயலாளர் கோபத்தில் இருப்பதாகவும் வேறு செக்கை கொடுக்குமாறு கேட்டார். நான் எனது வங்கி கணக்கு முடங்கியுள்ளதால் செக் கொடுக்க முடியாது என்றும் வேண்டுமானால் பணமாகத்தான் கொடுக்க இயலும் என்று கூறினேன். மேலும் ரூ.66,000/- என்பது அதிகமாக உள்ளது என்றும், நான் நேராக செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடத்தை பார்க்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டேன். அதற்கு அவர் மாலை சுமார் 5 மணியளவில் என்னை அண்ணா கூட்டுறவு வீட்டு கட்டுமான சங்கத்திற்கு அழைத்து சென்றார். அங்கு நான் செயலாளரை பார்த்த போது இங்கு வைத்து பேசமுடியாது என்றும் வெளியில் காத்திருக்குமாறு கூறினார். நானும் திரு.திருநாவுகரசும் கூட்டுறவு சங்கத்திற்கு வெளியில் வந்து காத்திருந்தோம். மாலை சுமார் 5.15 மணியளவில் செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடம் மற்றும் அங்கு வேலை செய்யும் ஒருவருடன் எங்களிடம் வந்தார். நான் செயலாளரிடம் எனது வங்கி கணக்கு முடங்கிவிட்டதால் நான் கொடுத்த செக் Dishonour ஆகிவிட்ட விபரத்தையும், அதனால் தாங்கள் கேட்ட தொகை ரூ.66,000/-த்தை பணமாகத்தான் கொடுக்க முடியும் என்று கூறினேன். அதற்கு செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடம் என்னிடம் "நான் எல்லோரிடமும் 5% கமிசன் வாங்குவேன், நீங்கள் உங்கள் கஷ்டத்தை கூறிய பின்பு தான் 3% கமிசனாக குறைத்து கூறினேன். ஆனால் செக்கை Dishonour செய்து ஏமாற்றுகிறாய் வீட்டிற்கே ஆள் அனுப்பி பணத்தை வாங்குவேன்" என்று மிரட்டினார். நான் எனது வங்கி கணக்கு முடங்கி விட்டதால்தான் செக்கை Dishonour செய்துவிட்டார்கள் என்றும், பணமாகத்தான் கொடுக்க இயலும் என்றும் மீண்டும் கூறினேன். மேலும் உடனடியாக அவ்வளவு பணம் ஏற்பாடு செய்ய முடியாது என்று கூறினேன். அதற்கு செயலாளர் திருமதி.ஜோதிமணி சரி ரூ.6,000/-த்தை குறைத்துக் கொள்கிறேன் நீங்கள் ரூ.60,000/- கொடுங்கள் என்று சொன்னார். நான் ATMல்

எடுத்து வந்திருந்த பணம் ரூ.10,000/- மட்டும் கையில் இருப்பதாக கூறினேன். அதை செயலாளர் அவர் அருகே நின்று கொண்டிருந்த சங்கத்தில் பணிபுரியும் தக்சன் என்பவரிடம் கொடுங்கள், நான் அவரிடம் பெற்றுக் கொள்கிறேன் என்று சொன்னார். நானும் ரூ.10,000/-யை திரு.தக்சனிடம் கொடுத்தேன். மேலும் நான் செயலாளர் திருமதி.ஜோதிமணி மேடமிடம் மீதி பணம் ரூ.50,000/-ம் அதிகமாக உள்ளது அதை ஏற்பாடு செய்ய மிகவும் சிரமமாக உள்ளது என்றும் பார்த்து உதவி செய்யுங்கள் என்றும் கேட்டேன். அதற்கு அவர் கடைசியாக ரூ.10,000/- போக மீதித் தொகை ரூ.50,000/- கொடுக்கனும் நீங்க மறுபடியும் கேட்டதால் மேலும் ரூ.5,000/- குறைத்துக் கொள்கிறேன், ஆனால் ரூ.45,000/-யை கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்று கூறினார். மேலும் "நான் இந்த சங்கத்தில் செயலாளராக தான் இருப்பேன், எப்படி வாங்கிய கடனை திருப்பி செலுத்துவாய் என்று பார்க்கலாம்" என்றும் மிரட்டினார். நான் பதில் எதுவும் கூறாமல் நின்று கொண்டிருந்தேன். அவர் மீண்டும் ரூ.45,000/- பணத்தை எப்போது தருவாய் என்று கேட்டார். நான் இரண்டு நாட்கள் அவகாசம் வேண்டும் என்று கூறினேன். அதற்கு திருமதி.ஜோதிமணி அவர்கள் "என்னை மீண்டும் மீண்டும் சந்திக்க வேண்டாம், திருநாவுகரசிடம் பேசி பணம் ரூ.45,000/-யை தக்சனிடம் வரும் 21.08.2026, வெள்ளி கிழமை கொடுத்துவிடுங்கள், நான் தக்சனிடம் பெற்றுக் கொள்கிறேன்" என்று கூறினார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். ஏற்கனவே பெற்ற வீட்டு அடமான கடனுக்கு திருமதி.ஜோதிமணி அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. அதனால் இன்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகம் வந்து, எனக்கு வீட்டு அடமான கடன் ரூ.22,00,000/- கொடுத்ததற்கு லஞ்சமாக ரூ.10,000/-த்தை திரு.திருநாவுகரசு மற்றும் திரு.தக்சன் மூலம் பெற்றுக் கொண்டு மீதி பணம் ரூ.45,000/-யை ஏற்கனவே அனுமதித்த வீட்டு அடமான கடனுக்காக கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்று கேட்கும் அண்ணா கூட்டுறவு வீட்டு கட்டுமான சங்கம் செயலாளர் திருமதி.ஜோதிமணி, புரோக்கர் திரு.திருநாவுகரசு மற்றும் திரு.தக்சன் ஆகியோர் மீது சட்டபடியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx (S.Loganathan) 20/08/2026. Submitted, Received the complaint on 20.08.2026 at 18.45 hrs., and made preliminary verification between 18.45 hrs., and 19.45 hrs., and after

getting approval from DVAC, Chennai, a case was registered in Tiruppur V&AC Cr.No.10/2026/AC/TPR u/s 7 (b) of the Prevention of Corruption (Amendment) Act 2018 on 20.08.20206 at 19.45 hrs. Sd/- xxxx (B.Geethalakshmi) 20.08.2026 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of Tr.S.Loganathan, S/o. Subramaniam, D.No.1/A/1, Nagathal Koil Street, Samundipuram, Tiruppur Dirtrict is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

20/8/26

(B.Geethalakshmi),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.